மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருவொற்றியூர்

**OS.No. 49 / 2023**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.சங்கர்கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜூலை மாதம் 02-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

தேதி - **02.07.2025**

பெயர் - எஸ்வி.விமல்குமார்

த/பெ - எஸ்வி.ராஜா

தொழில் - ரியல் எஸ்டேட்

ஊர் - எர்ணாவூர்

வயது - **48**

சாட்சி - PW1

விசாரணை தொடங்கும் நேரம் : **01.05 P.M**

முதல் விசாரணை :-

1.நான் இவ்வழக்கின் வாதி ஆவேன்.எனது வாக்குமூலம் பிரமாண பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன், அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

(1) 09.01.1967 தேதியிட்ட திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் கணினி வழி எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ**1** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

(2) 10.03.2023 தேதியிட்ட திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பொதுஅதிகாரப்பத்திரம் கணினி வழி எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ**2** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

(3) 05.01.2023 தேதியிட்ட கணினி வழி எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழ்வா.சா.ஆ**3** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

(மேலும் ஆவணங்களை தாக்கல் செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

விசாரணை முடியும் நேரம்:- **12.50 P.M.**